பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள் (நிமித்தங்கள்)

முனைவர் இல.பிரவீன் பீற்றர் ஞானையா
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி
நாசரேத்

முன்னுரை

இலக்கியம் மக்களுடைய வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் என்பது இலக்கிய ஆய்வாளரின் எண்ணமாகும். வாழ்க்கையில் மனிதர் கண்ட ஆழ்ந்த அனுபவத்தையும் பேருண்மைகளையும் வெளியிடுவதும் இலக்கியமே. ஒவ்வொரு சந்தர்ப்பமும் சூழலும் முன்னர் வாழ்ந்த மனிதர்களை எவ்வாறு தாக்கின என்பதையும், அத்தாக்குதல்களின்போது அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையும் அறிவிக்கும் அனுபவ அறிவுக் கருவூலங்களாக இலக்கியங்கள் இலங்கின. வாழ்ந்து காட்டும் வாழ்க்கையைச் சொற்களாற் கூறுவதே இலக்கியமாகும்.

மனித இயற்கையும் நிமித்தமும்

நிமித்தங்களை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து அவை அனைத்தும் உண்மை என நிறுவுதல் இயலாது. அவையெல்லாம் மூட நம்பிக்கைகள் என்று கருதினாலும், அவற்றுள் சில உலகியலை விட்டு முற்றும் விலகியதாகக் கொள்ளவும் இடமில்லை. வாழ்க்கைப் போராட்டத்தில் மக்கள் தங்களுடைய ஆற்றல்களை அதிகரித்துக் கொள்ள இவற்றை உருவாக்கினர் என்பர். பல பண்பாட்டு நிலைகளிலுள்ள மக்கள் குறிப்பிட்ட சில நம்பிக்கைகளை உடையவர்களாயிருப்பதும் இங்கு எண்ணுதற்குரிய ஒன்றாகும்.

நிமித்தங்கள் அனைத்தும் அச்சத்தின் காரணமாகவே தோன்றியிருக்கலாம் என்று நாம் கருதவும் கூடும். ஒரு செயலினை ஆற்றும் முன்னர் ஒருவன் ஏதேனும் ஒரு பறவையினை இயல்பாகப் பார்க்க நேரிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்பணியினை நிகழ்த்துங்கால் அவனுக்குப் பல்வேறு துன்பங்களும் இடையூறுகளும் ஏற்படுகின்றன. தான் தொடங்கிய அப்பணியில் அவன் தோல்வியுறுகிறான். தோல்வியுற்ற அவன், தான் பார்த்த பறவைக்கும் தன் செயலுக்கும் தொடர்பு இருப்பதாகக் கருதுகிறான். பன்முறை இது போன்ற நிகழ்ச்சிகள் அவனுக்கு ஏற்பட்டிருத்தல் கூடும். எனவே பறவையினைப் பார்ப்பதும், இவை போன்ற பிற குறிகளும் அவனுக்குத் தீ நிமித்தமாகத் தோன்றுகின்றன. இவ்வாறே சில நன்னிமித்தங்களும் அவன் வாழ்க்கையில் தோன்றியிருத்தல் கூடும். நாளடைவிலே இவற்றில் அவனுக்கு நம்பிக்கையும் பிறக்கிறது.

இன்றும் இது போன்ற நம்பிக்கைகள் நம்மிடையே இருந்து வருவதைக் காண்கிறோம். எண்ணெய்க் குடம், விறகுக் கட்டை, வாள், அரிவாள் முதலான கொலைக் கருவிகள் எதிர்ப்படலும், கைம்பெண் எதிர்ப்படலும், தீ நிமித்தங்களாக எண்ணப்படுகின்றன. ‘மிருச்ச கடிகம்’ என்னும் வடமொழி நாடகத்தில் புத்த துறவியார் எதிர்ப்படுதலைத் தீ நிமித்தமாகக் குறிப்பிடுவதும் இங்கு எண்ணுதற்குரியதாம்.[1] தீ நிமித்தங்களைக் கண்டஞ்சுவோர் நன்னிமித்தம் நிகழ வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். எதிர்பார்த்தது நிகழாதபோது தாமாகவே நிமித்தங்களைச் செயற்கையாக உண்டாக்குகின்றனர். இவ்வழக்கம் இன்னும் நாஞ்சில் நாட்டில் நடைமுறையிலிருப்பதைக் காணலாம். ஒருவர் ஊர்ப்பயணம் புறப்படும்போது அவர் தம் வீட்டாரையே தண்ணீர்க் குடத்தோடு, அல்லது குழந்தையோடு நன்னிமித்தங்களாக எதிரே வரச் செய்வராம்.[2] இதனை அச்சத்தினால் வளர்ந்த காப்பு உணர்வு என்றே கூறலாம்.

நிமித்தம் - சொல்லும் பொருளும்

நிமித்தம் என்பது பின்னர் நிகழும் நன்மை தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறி என்பர். அரசரின் உறுதிச் சுற்றத்தார் ஐவருள், வருவது கூறவல்ல குறி சொல்பவரை ‘நிமித்திகர்’ என்று

கூறுவதும் ஈண்டு எண்ணுதற்குரியது. நிகழ்ச்சிக்கு ஏதுவாகிய காரணத்தை ‘நிமித்த காரணம்’ என்று குறிப்பர். தொல்காப்பியத்தில் புறத்திணையியலில், ‘நாளாலும் பறவைகளாலும் தோன்றும் காரணங்களை,

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்[3]
என்று ‘நிமித்தம்’ என்றே கூறக் காணலாம்.

‘தலைவியும் தலைவனும் உடன் போய்காலத்து அம் மகளைப் பயந்த நற்றாய் தன்னையும் தலைவனையும் தன் மகளையும் குறித்துக் காலம் மூன்றுடன் நிலைபெற்றுவரும் நல்வினை தீவினைக்குரிய காரியங்களைத் தன் நெஞ்சிற்கு விளக்கி வருந்திக் கூறுவதாகத்’ தொல்காப்பியர் அகத்திணை இயலில் பின்வரும் நூற்பாவினைக் கூறுவர்:

தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று
அன்ன பிறவு மவற்றொடு தொகை[4]

இதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர்,

“அச்சஞ் சார்தலென்று கூறப்பட்டவற்றையும் அவை போல்வன பிறவற்றையும் பல்லி முதலிய சொல், நற்சொல், தெய்வங்கட்டினும் கழங்கினும் இட்டுஉரைக்கும் அத்தெய்வப் பகுதி என்றவற்றோடு வருந்திக் கூறனும்” என்று உரை எழுதுவர். இவற்றால் தொல்காப்பியர் காலத்து இருந்த நிமித்தக்குறிகளை அறியமுடிகிறது.

பறவைகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கப்படும் நிமித்தம் புள் நிமித்தம் என்றாயிற்று.[5] ‘புள் ஓர்த்தல் என்பதற்கு மலைபடு கடாத்தில் நச்சினார்க்கினியர் நிமித்தம் பார்த்தல்’ என்றே உரை எழுதுவர்.[6] இதுவே நாளடைவில் ‘சகுனம் பார்த்தல்’ என்றாகியிருக்கலாம். சகுனம் என்பதற்குப் பறவை என்றும் பொருள் உண்டு.[7] பறவைகள் வலமிடமாதல் முதலிய நன்மை தீமைக் குறிகளே ‘சகுனம் பார்த்தல்’ என்றாகியிருக்கக் கூடும். ‘புறப் பொருள் வெண்பாமாலை’ ‘சொகினம்’ என்று கூறுவதும் ஈண்டு உளங்கொளத்தக்கதாம்;.

ஆடமைத் தோனி விரிச்சியும் சொகினமும்
வேறுபட வஞ்சி விதுப்புற் றன்று[8]

என்பது அப்பாடல். இதற்கு உரையியற்றிய சாமுண்டி தேவநாயகரும், ‘நற்சொல்லும் நிமித்தமும்’ என்றே பொருள் கூறுவர். ஆனால், இன்று சகுனம் பார்த்தல் என்பது பொதுவாக எல்லா வகையான நிமித்தங்களையும் தன்னுள் அடங்கியதாகக் கருதப்படுகிறது.

நிமித்தமும் அதன் வகைகளும்

இந்நிமித்தத்தைப் பல்வேறு வகையாகப் பாகுபடுத்திப் பார்ப்போமானால் பல அரிய செய்திகளை அறிதல் கூடும். பொதுவாக நற்செயலையும், நற்பயனையும் காட்டும் குறியினை ‘நன்னிமித்தம்’ எனவும், தீச்செயலையும் தீமையையும் காட்டும் குறியினைத் ‘தீ நிமித்தம்’ எனவும் வழங்குவர். இந்நிமித்தங்கள் பல்வேறு பொருள்கள் பற்றியும் செயல்கள் பற்றியும் எழுந்தன. மரம், பறவை, விலங்குகளையும் மாந்தரையும் அடியொற்றி இவை எழுந்தன. மாந்தர் கண்ட கனவுகளும் நிமித்தங்களாய் அமைந்தன. இனி ஒவ்வொன்றையும் விளங்கக் காண்போம்.

மரம்

மரத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்த நம்பிக்கைகளைப் பழந்தமிழர் மட்டும் கொண்டிருக்கவில்லை. பிற நாட்டாரும் இத்தகைய நம்பிக்கைகளில் நாட்டஞ் செலுத்தியிருந்தனர். மேலை மிசௌரி பள்ளத்தாக்கில் வாழ்ந்த சிவப்பிந்தியர்களும், மேற்கு ஆப்பிரிக்காவில் வாழ்ந்த மக்களும் இத்தகு நம்பிக்கையினைக் கொண்டிருந்தனர்.[9] நம் பழந்தமிழர் கொண்டிருந்த இந்நம்பிக்கையினைத் தொல்காப்பியத்திலும் பதிற்றுப்பத்திலும் இனிது காணலாம்.

உன்ன நிலை

உன்னம் என்பது ஒருவகை மரம். இம்மரம் தளிர்த்துத் தழைத்திருப்பின், அரசனுக்கு நன்மையாம், கரித்துகாட்டின் தீமையாம். படையெடுத்துச் செல்லும் வேந்தனும் படை மறவர்களும் இந்நிமித்தம் பார்த்துப் புறப்படுவர். தொல்காப்பியர் புறத்திணையியலில், 'உடல் வேந்தடுக்கிய உன்னநிலை'[10] என்று கூறுவர்.

உன்னநிலை என்னும் துறை, "வேந்தன் கருத்தானன்றி அவன் மறவன் வேந்தற்கு நீ வென்றி கொடுத்தால் யான் நினக்கு இன்னது செய்வலெனப் பரவுதலும், எம்வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு பொருதுக வெனவும் பகை வேந்தற்கு ஆக்கம் உளதெனின் அக்கோடு படுவதாக வெனவும் நிமித்தம் கோடல்"[11] என இதற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரையும் படித்தின்புறற்குரியது.

சேரமன்னன் நார்முடிச் சேரலை வெற்றிகொள்ள விரும்பிய பகைவர்கள் உன்ன மரத்தினை நிமித்தம் வேண்டினராம். விரிந்து தழைக்க வேண்டிய உன்னம் கரிந்து உதிர்ந்து காட்டி அவர்கள் பெறும் தோல்வியினை முன்னரே காட்டியதாம்.[12]

பொன்னி னன்ன பூவிற் சிறியிலை
புன்கா லுன்னத்துப் பகைவன்

என்று செல்வக்கடுங்கோவாழியாதனைப் பொய்யா நாவிற் கபிலர் 'உன்னத்துப் பகைவன்' என்றே பாராட்டுகின்றார். ஈண்டுப் பேராசிரியர் கோ. சுப்பிரமணியபிள்ளை, 'உன்னத்துப் பகைவன்',என்பதற்குத் தரும் இருபொருள்களும் எண்ணுதற்குரியனவாம்.[13] உன்ன மரமன்றி ஏனைய பெருமரங்களும் இந்நிமித்தத்தைக் காட்டுவன எனப் புறநானூறும் பகர்கிறது.[14]

புறப்பொருள் வெண்பாமாலையார்,

துன்னருஞ் சிறப்பிற் றொடுகழன் மன்னனை
உன்னஞ் சேர்த்தி யுறுபுகழ் மலிந் தன்று[15]

என்று உன்னமரத்தின் வாயிலாக நிமித்தம் கூறி மன்னன் பெற்ற புகழினைப் பாராட்டுவர்.

'மாற்றாரும் மறவரும், கட்டிய இவ் வீரக் கழலானிடத்தே மாறுபாடு கெட்டனர். உன்ன மரமே, நீயுந் தழைப்பாயாக' என்று புகழ்ந்ததை,

துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க - மன்னரும்
ஈடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுமுன்
கோடெலா முன்னங் குழை.[16]

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலால் நன்கறியலாம்.

மரம் தழைத்தும் உதிர்ந்தும் காட்டும் நன்னிமித்தத் தீ நிமித்தக்குறிகள் உலகெங்கும் பண்டைய மக்களிடமும் பரவியிருந்தன. உரோம் நாட்டில் புனிதமரம் ஒன்று உதிர்ந்து வாழ்கின்ற காட்சியினைக் கண்டதும் அச்சத்தில் கூக்குரலிடுவராம். அண்மையிலிருப்பவர்கள் அக்காட்சியினைக் கண்டதும் அது நெருப்பு ஏற்படும் தீ நிமித்தம் எனக்கருதி நீர்வாளிகளோடு குழுமிப் பாதுகாப்பராம்.[17] எனவே இந்நம்பிக்கையும் அதன்வழி எழுந்த அச்சமும் எல்லா நாட்டிலும் பரவியிருந்தது எனலாம்.

பறவை

பறவைகள் ஒலிப்பதையும் பறப்பதையும் கொண்டும் நிமித்தங்கள் எழுந்துள்ளன. ஒரு நாட்டில் 'புதுப்புள்வரினும் பழம்புள் போகினும் தீயநிமித்தம்' என்று புறநானூறு கூறும்.[18] ஆனிரையிருக்கும் காட்டில் காரியென்னும் பறவை கத்தினாலும் அது தீய நிமித்தமாகக் கருதப்பட்டது. காரியென்னும் பறவை உட்புகுந்ததால் தீமை வருமென்று ஆநிரையிலிருந்த நிமித்தகன் கூறினான் என்று சீவக சிந்தாமணி கூறுவதும் இங்குக் கருதத்தக்கதாகும்.[19] இக் காலத்தும் ஒருவர் வெளியிற் புறப்படும்போது விலங்கு பறவைகளில் இவை இவை எதிரில் வந்தால் இன்ன இன்ன நிமித்தம் என்று கருதுவதையும் காணலாம்.

புள் ஓர்த்துக் கழிதல்

போர்களமாயினும், காதற்களமாயினும் நிமித்தம் பார்த்துப் புறப்பட்டது போலவே பொருளும் பரிசிலும் பெற விழைந்த புலவரும் கூத்தரும் நிமித்தம் பார்த்தே புறப்பட்டனர். பரிசில் பெற்ற

நன்னனிடம், வழியிற் கண்ட கூத்தரை ஆற்றுப்படுத்த விரும்புகின்றான் ஒரு கூத்தன். அவர்கள் செல்ல வேண்டிய வழியினை கூறி வருங்கால், ‘இராக்காலத்து, பகற்பொழுதில் நடந்து வந்த வருத்தம் போக்கும்படி புல்வேய் குரம்பையிடத்துத் தங்குவீர். சின்னாள் தங்கிய பின்னர், இராக்காலம் நீங்குதலையுடைய விடியற்காலத்து நிமித்தம் பார்த்துப் போவீர்’ என்கின்றான். இதனை,

புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின்[20]

என்னும் மலைபடுகடாம் தொடரால் நன்கு அறியலாம். ‘நல்ல சகுன மென்ன வெதிர் கண்டு வந்தாய் நம்பி நீ’ என்று பிற்காலத்தே எழுந்த பிரபுலிங்கலீலை கூறுவது போலக் கூத்தனும் பரிசில் பெறச்செல்லும் மற்றொருவனைக் கண்டபோது மகிழ்ந்து, ‘என்னைப் பார்த்தலினாலே நீவிர் புறப்படுகின்ற பொழுது நமக்கு வரும் ஆக்கத்தை எதிர்கொண்டு நின்று நன் முகூர்த்தத்தோடு நன்னிமித்தத்தையும் உடையவராக இருந்தீர்’, எனப் பாராட்டுகின்றான். இங்ஙனம் புலவன் மற்றொரு புலவனை ஆற்றுப்படுத்தும் பொழுது, ‘நன்னிமித்தம் பார்த்துப் போவாயாக!’ என்று கூறுவதிலிருந்து அக்காலத்திய நிலையும் நன்கு புலனாகிறது.

புள்ளும் பொழுதும் பழித்தல்

கழைதின்யானையார் என்னும் சங்கப்புலவர் வரையாது சுரக்கும் கொல்லிமலைத் தலைவனாகிய வல்லில்ஓரியைப் பாராட்டிப் பாடிய புறநானூற்றுப் பாடலில், இரவலர் புரவலரிடம் புள்ளும் பொழுதும் பார்த்தப் புறப்பட்ட செய்தியினைக் கூறுவர்.

இரவலர் பரிசில் பெறாதபோது தாம் நாடி வந்தவரைப் பழித்துப் பேசார். தாம் புறப்பட்ட நேரத்தையும் புள் நிமித்தத்தையுமே பழிப்பர். ‘எனக்கு இல்லையெனினும் உன்னைப் புலவேன். வானம் போல வரையாது சுரக்கும் வள்ளியோய் நீ வாழி’ என்று புறநானூற்றுப் புலவர் வாழ்த்துகின்ற காலத்திலும் நன்னிமித்தமும் தீ நிமித்தமுமே வெற்றிக்கும் தோல்விக்கும் காரணம் எனக்கருதும் உள்ள நிலையையும் உணரமுடிகிறது.

புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்[22]

என்னும் பகுதி இதனை நன்கு தெளிவுறுத்தும்.

காக்கையும் நன்னிமித்தமும்

காக்கை கரைந்தால் விருந்து வரும் என்று எண்ணுகின்ற வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. குறுந்தொகையில் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய பாட்டு இதனை அறிவிக்கும்.

விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே[23]

என்பது அப்பாடல் தொடராகும். ஐங்குறுநூற்றிலும் காக்கை கரைவதை நன்னிமித்தமாகக் கொண்டமை காணப்படுகிறது.[24]

இத்தகைய நம்பிக்கையினை பறவைகள் பறப்பதையும் ஒலிப்பதையும் நிமித்தங்களாகக் கருதியமையைப் பழந்தமிழரைப் போலப் பண்டைய கிரேக்கர்களும் உரோமனியர்களும் கொண்டிருந்தனர்.[25] பறவைகள் குறித்துப் பழந்தமிழர் கொண்டிருந்த நம்பிக்கையினை மார்க்கோ போலோவும் தம் பயணக் குறிப்பில் சுட்டியிருப்பதை இங்குக் கருதுதல் தகும்.[26]

விலங்குகள்

விலங்குகளில் சில வழிமறித்து ஓடுமாயின் அவை தீ நிமித்தம் காட்டும் குறிகள் என நம்பினர். இன்றும் கூட கழுதை கத்துவது நல்ல நிமித்தாகவும், நாய் அழுகுரலெழுப்புவது தீ நிமித்தமாகவும், கருதப்படுகிறது. மான் வலமிருந்து இடமாகச் செல்லுதலும், இடமிருந்து வலமாகச் செல்லுதலும் முறையே நன்னிமித்த தீ நிமித்தக்குறிகளாகக் கருதப்பட்டன.[27] பூனை தன் முகத்தையோ காதினையோ கழுவிக் கொள்ளுதலை மழை வரும் நிமித்தக் குறியாகப் பழங்காலத்திய மக்களும் நம்பினர்.[28] பழந்தமிழ் இலக்கியங்களில் நிமித்தம் கூறும் வகையில் பல்லியைப் பற்றியே மிகுதியாகக் காணப்படுகிறது. பல்லி ஒலிக்கும் இடத்தையும், அதன் ஒலியையும் கொண்டு நன்மை தீமைகளைக் கருதுவர்.

பல்லியும் பலனும்

வினைமுற்றி மீண்ட தலைமகன் பேரார்வத்தோடு தலைவியைச் செல்லுகின்றனன். அப்போது தேர்ப்பாகனிடம் பின்வருமாறு உரையாடுகின்றான் 'என் அன்பு வருகையினை எதிர்நோக்கி என் இல்லத் தலைவி இல்லத்தின்கண் நிமித்தம் கேட்டற்குரிய இடத்திலே நிற்கின்றாள். நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து நன்னிமித்தத்தைக் குறிக்கும் பக்கத்திலே பல்லி சொல்லுந்தோறும் நின்று மகிழ்கின்றாள்.'

பல் மாண்
ஓங்கிய நல்லி லொருசிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள்[29]

என்று அகநானூறு இதனை அழகுறக் கூறும்.

பல்லியின் பெருமை

தலைவன் பிரிந்து சென்ற காட்டின் இயல்பைக் கூறவந்த தலைவி ஒருத்தி, 'செல்லுகின்ற வழிப்போக்கர்க்கு மேல் வந்துறும் நிகழ்ச்சிகளை அறிவிக்கின்ற சிறிய செம்மையுடைய நாவினையும், மணியோசையைக் கேட்டாற் போன்ற தெளிந்த குரலையும், சோதிடம் கூறுகின்ற வாயினையுமுடைய பல்லிகளையுடைய காடு' என்கிறாள். இதனை அகநானூறு,

கள்ளி முள்ளழரப் பொருந்திச் செல்லுநர்க்கு
உறுவது கூறுஞ் சிறுசெந் நாவின்
மணியோர்த் தன்ன தெண்குரற்
கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே[30]

என்று கூறும். பல்லி நன்மையாயினும் தீமையாயினும் நடுநின்று கூறுதலின் 'செந்நா' என்று கூறினாள் போலும்.

பல்லியும் பற்றுக்கோடும்

ஆறுதல் கூறும் அன்பு மொழிகளே துன்பத்தில் வருந்துவோர்க்கு அருமையான அரவணைப்பாகும். அவையே அவர் தம் உயிரின் பற்றுக்கோடாகவும் அமையும். நோயுற்றுத் துடிக்கும் நோயாளர்க்கு மருந்தினும் மாமருந்தாய் அமைவன மருந்துவரும் மற்றையோரும் கூறும் உள்ளன்பு மொழிகளே ஆறுதலுரைகளே. அவையே அவர்களுக்கு உயிர்ப்பும் உணர்வும் தருவன. தலைவனைப் பிரிந்த தலைவிக்கோ வினைதீர்க்கும் மாமருந்தாய் அமைந்தது பல்லியின் நிமித்தமே.

ஒவ்வொரு நாளும் சுவரிலே வட்டங்கீறிப் பார்த்துப் பார்த்து எழுது சுவர் நனையுமளவுக்குக் கண்ணீர் விட்டு அழுதனள் தலைவி. அவ்வன்புடைத் தலைவியின் நலத்தை நினைந்து இரங்கித் தன் நெஞ்சிற்குச் சொல்லுகிறான் தலைவன்:

செய்குறி ஆழி வைகறோ றெண்ணி
எழுதுசுவர் நனைந்த அழுதுவார் மழைக்கண்
விலங்கிவீழ் அரிப்பனி பொலங்குழைத் தெறிப்பத்
திருந்திழை முன்கை அணலசைத் தூன்றி
இருந்தனை மீது பொருந்துழிக் கிடக்கை
வருந்து தோட் பூசல் களையு மருந்தென
உள்ளுதொறு படூஉம் பல்லி
ஹுபுள்ளுந் தொழு துறைவி[31]

'பிரிவாற்றாது, வருந்துகின்ற தோளினது மெலிவைத் தீர்க்கும் மருந்து இது என்று நினைத்து, பல்லியின் சொல்லை நன்னிமித்தமாகக் கொண்டு, அது சொல்லுந்தொறும் தன்னைக் கை கூப்பித் தொழுது, அந்நிமித்தம் பற்றுக்கோடாக உயிர் வாழ்கிறாள் தலைவி' என்பது தலைவன் கூற்று. 'புள்ளுந் தொழுதுறைவி' என்னுந் தொடரால் அவளுடைய துன்பநிலையும் அவள் அந்நிமித்தத்தைப் பற்றுக்கோடாகக் கொண்ட உண்மை நிலையும் நன்கு விளங்கும்.

மாந்தர்

பறவைகள் விலங்குகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு நன்னிமித்தங்களும், தீ நிமித்தங்களும் தோன்றியன போலவே மாந்தரை அடியொற்றியும் நிமித்தங்கள் எழுந்தன. திருமணமான சுமங்கலியோ அல்லது கன்னிப் பெண்ணோ நீர்க்கடத்தை ஏந்திவருவது நல்லநிமித்தமாகக் கருதப்பட்டது.[32] ஆனால், சங்க இலக்கியங்களில் மாந்தர் எதிர்ப்படலை, அவர்தம் வரவையும் செலவையும் வைத்து நிமித்தம் காணும் மரபு காணப்படவில்லை. மாந்தர் பேசும் இயற்கையான பேச்சினையே நன்னிமித்தமாகக் கொண்டனர். இதனை 'நற்சொல் விரிச்சி' என்பர்.

விரிச்சி

விரிச்சி என்ப நற்சொற் கேட்டலாம். அதாவது ஒன்று நன்றாமோ தீ தாமோ என்று அறிய விரும்புவார் ஊர்ப் புறத்தே சென்று, நெல்லும் மலரும் தூவித் தெய்வம் பரவி, அயலிலே உண்டாகும் ஏதிலார் சொல்லை ஓர்ந்து நிற்பர். அங்ஙனம் நின்ற காலை அயலில் எழும் சொல் தம் கருத்திற்கு இயைபுடையதாய வழி நன்றாம் என்றும் முரணிய வழித் தீதாம் என்றும் கொள்வர். இதனை,

அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை இனவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொகுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமா னோக்கி யாய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையன் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தா
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்[33]

எனவரும் முல்லைப்பாட்டுப் பகுதியில் இனிதுணரலாம்.

போர்புரிய விரும்பிய அரசர்கள் முதலில் பகைவரின் ஆநிரைகளைக் கைக்கொள்ளுவது வழக்கம். அப்போது வெற்றி கிடைக்குமா என்பதனை அவனுடைய படைவீரர்கள் அருகிலுள்ள பாக்கத்தில், மக்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, அவர்களறியாமல் சொற்கேட்கும் அளவில் நின்று, அவர்கள் கூறும் சொற்களை நிமித்தமாகக் கொள்ளுவர். இதனைத் தொல்காப்பியம் 'பாக்கத்து விரிச்சி'[34] என்றும் கூறும். புறப்பொருள் வெண்பா மாலையும்,

வேண்டிய பொருளின் விளைவு நன்கறிதற்கு
ஈண்டிருள் மாலைச் சொல் லோர்த்து[35]

என்று கூறுவதும் ஈண்டுக் கருதுதற்குரியதாம். 'விரும்பிய பொருளின் ஆக்கத்து அழகுணர்தற்குச் செறியும் இருண்ட மாலையிடத்து நற்சொற்கேட்டல்' என்பர் இதன் உரைகாரர்.

புள்ளும் விரிச்சியும்

இணைபிரியாது வாழ்ந்த இல்லற தலைமகனும் தலைவியும் பிரிய நேரிடுகிறது. தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துகிறாள், வாடுகிறாள், சுணங்கு பூத்த அணங்காகிறாள். எனவே, 'வெற்றி பொருந்திய கொற்றவைக்குப் பலிக்கடனும் பூணோம், கைந்நூலும் கட்டோம்' என்று வருந்திக் கூறுகிறாள்.

புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்
உள்ளது முள்ளா மன்றே தோழி[36]

என்று கூறுவதினின்று தலைவனைப் பிரிந்துறையும் மகளிர் காப்புநூல் கையிற்கட்டி, நோன்புபூண்டு புள்ளும் விரிச்சியும் கேட்பர் என்பது புலனாகும். தலைவியின் காதல் மாண்பும், அன்புடை நெஞ்சமும் இதனால் இனிதே புலனாகின்றன. புறத்திணையில் மட்டுமேயன்றி

அகத்திணையிலும் இக்குறிக் கேட்கும் வழக்கம் இருந்ததும் நன்கு தெளிவாகும். இங்ஙனம் விரிச்சி கேட்டு நின்றதை நற்றிணையிலும், புறநானூற்றிலும் மேலும் காணலாம்.[37]

பெண்ணியல் கூறும் நன்னிமித்தம்

மாந்தரின் உடலில் ஏற்படும் குறிகள் கண்டும் பழந்தமிழர் நிமித்தங்களைக் கருதினர். தலைவன் தலைவியினைப் பிரிந்தான், காலமும் நீண்டது. அவன் குறித்த பருவ வரவின் கண்ணும் வராமையினை எண்ணி, அவன் அன்புருவை நினைந்து வருந்துகின்றாள் தலைவி. அவள் மேனியல்பை அறிந்த தோழி அவனை ஆற்றுவிக்கின்றாள். “வேந்து விடு தொழிலின்கண் சென்ற தலைவன் வெற்றியுடன் முடித்து விரைந்து வருவதை நின் பெண்ணியல்பால் கண்டனன், கவலற்க' என நிமித்தக் குறிகள் கூறி ஆற்றுவிக்கின்றாள். பெண்ணியல், கண்ணினாடல், தோள் இடம் துடித்தல், நுதலொளி சிறத்தல் முதலிய பெண்பாற்கு உரிய குறிகள். ‘காதற் கொழுநற்குளவாகும் நன்மை தீமைகள் மகளிர் மேணிக்கண் தோன்றும் சில குறிகளால் உணரப்படும் என்பது பற்றி, பெண்ணியல் காமர் சுடர் நுதல் விளங்கும் என்றாள்’[38] என்பர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள். இதனை,

வேந்துவிடு விழுத்தொழி லெய்தி யேந்து கோட்
டண்ணல் யானை யரசுவிடுத் தினியே
எண்ணிய நாளகம் வருதல் பெண்ணியல்
காமரு சுடர்நுதல் விளங்கும்
தேமொழி யரிவை தெளிந்திசின் யானே[39]

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் அழகுற விளக்கும்.

கனவு

பழந்தமிழர், கனவால் எதிர்காலத்தே நன்மையும் தீமையும் விளையும் என்று கருதினர். இத்தகைய கனவின் பயனை அறிவிக்கும் கனாநூல் ஒன்றும் அக்காலத்தே இருந்தாகச் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாருரையால் அறியலாம்.[40] கண்ணகி தான் கண்ட கனவைத் தேவந்தியிடம் உரைத்த பகுதியே கனாத்திறம் உரைத்த காதை. ஆடைக்கலக்காதையில் கோவலன் மாடலனிடமும், வழக்குரைக்காதையில் பாண்டியன் மனைவி தன் தோழியிடமும் தான் கண்ட தீக்கனவைக் கூறினர்.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவனைப் புகழ்ந்துபாடும் கோவூர்கிழார், வளவனுடைய பகைவர்கள் தீக்கனவைக் கண்டு அவனால் தமக்கு வரும் தீமை நோக்கிக் கலங்கியிருந்த செய்தியைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் கூறுவர்.[41] இங்ஙனம், கனவுகள் எதிர்கால நிகழ்ச்சிகளைக் குறிக்கும் இயல்புடையன என்று பண்டுதொட்டே மக்கள் கருதினர். பண்டைய ரோமானிய நாட்டிலே ஜூலியஸ் சீசர் கொல்லப்படுவதற்கு முன்னே அவனுடைய மனைவி கல்புர்னியா (Calpurnia) தீக்கனவுகள் கண்டு தன் கணவனை வெளிச்செல்லாது தடுத்ததாகக் கூறுவர். பிற்காலத்தும் அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர் ஆபிரஹாம் லிங்கன் (Abraham Lincon) தமக்குக் கொலையால் சாவுநேரும் என்று முன்னமேயே கனவு மூலமாக அறிந்து தம் நாட்குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்தாராம்.[42]

விளக்கும் வெற்றியும்

இவை போன்ற நிமித்தக் குறிகளேயன்றி கொழுந்து விட்டெரியும் ‘ஔிச் சுடரும்’ நன்னிமித்தத்தைக் காட்டும் குறி எனப் புறப்பொருள் வெண்பாமாலை புகழ்கிறது. சுழல்காற்று சூறாவளியாக வீசத் தானைப்படையினருக்கு நன்னிமித்தம் தோன்றுகிறதாம். பெருங்காற்று வீசியபோதும் வலமாகச் சுழன்றெழுந்து சோதி உயர்ந்து எரிகிறது. எனவே, விளக்கின் மிகுந்த ஔி வேந்தற்கு வெல்நெறியைக் காட்டுகின்றதாம்.

அளப்பருங் கடற் றனையான்
விளக்கு நிலை விரித்து ரைத்தன்று[43]

என்னும் கொளுவிற்கு ஏற்ப,

வளிதுரந்த கண்ணும் வலந்திரியாய் பொங்கி
ஔிசிறந் தோங்கி வரலால் - அளிசிறந்து

நன்னெறியே காட்டு நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு

என்னும் பாடலைச் சான்று காட்டுவர் புறப்பொருள் வெண்பாமாலையார்.

ஊழ் மீது நம்பிக்கை

சங்க கால மக்கள் ஊழ்மீது நம்பிக்கை உடையவராக விளங்கினர். இதனை ஐங்குறுநூறு பாடல் கொண்டு அறியலாம். தலைமகள் உடன் போய் வழி அவள் இளமை நினைந்து இரங்கித் தாய் இது ஊழ் காரணமாக நடந்தேறியது என்கிறாள்.

பல்ஊழ் நினைப்பினும் நல்லென்றுஊழ
மீளிமுன்பின் காளை காப்ப,
முடியகம் புகாக் கூந்தலள்
கடுவனும் அறியாக் காடிறந்தோளே[44]

“பலமுறை ஆராய்ந்தாலும் இந்த உடன் போக்கு நல்ல முறையே ஆகும் என எண்ணி, மீளி போன்ற வலையையுடைய காளையைப் போன்றவன் காவல் செய்ய, முடித்தற்குரிய நீளம் இல்லாத கூந்தலையுடையவளான என் மகள் குரங்குகளாலும் புகுந்தறியப் படாத காட்டைக் கடந்து போயினன் அவள் அறிவு இருந்தவாறு என்னே!” எனத் தாய் உரைத்தாள்.

பல்லூழ் என்பது பலமுறை எனவும் நல் என்ற ஊழ் என்றது நல்லன என்ற ஊழையுடையனவான செய்கைகள் எனவும் பொருள்படும்.

நல்ல நிமித்தம் காணுதல்

தலைவன் மணம் பேசி சான்றோரை அனுப்பத் தலைவியின் சுற்றத்தார் மறுத்தனர். அதைக் கேட்டு, ‘இ.்.து எப்படி முடியுமோ?” என்று வருந்திய தலைவிக்குத் தோழி தனக்கு நற்கறி செய்யக் கண்டு, ‘விரைவில் வந்து மணந்து கொள்வான்’ எனக் கூறுகிறாள்.

நுண்ணேர் புருவத்த கண்ணும் ஆடும்
மயிர்வார் முன் கை வளையும் செறூஉம்
களிறுகோள் பிழைத்த கதழ்சிறந்தெழு புலி
எழுதரு மழையின் குழுமும்
பெருங்கல் நாடன் வருங்கொல் அன்னாய.;[45]

இப்பாடலின் படி தோழி தனது புருவத்தை உடைய இடக்கண் துடிக்கும். இடக்கண் துடித்தல் பெண்டிர்க்கு நன்னிமித்தம் மயிர் ஒழுக்கையுடைய முன்கை. நெகிழ்வு நீங்கிப் பொருந்தும்.

களிறு கொள்வதில் பிழைபட்ட புலி சினம் மிக்கு முழங்கும். மலை நாடன் எனக் கூறியதால், தம் சுற்றத்தார் மணந்து கொள்வதை மறுத்தமை அறிந்து கண் கலுழ்ந்து மேனி மெலிந்து ஆற்றாத தலைவிக்கு உள்ளுறையால் தலைவனின் ஆண்மைச் சிறப்பைச் சொல்லி ஆற்றுவிக்கலானாள். அவள் இடக்கண் துடித்தது, கை வளை செறிந்தது என்பன நன்னிமித்தங்கள்., எனவே இவற்றைப் புலப்படுத்தித் தலைவன் மணந்து கொள்வான் என்று தெளிவித்தாள். இது அக்காலத்தில் நிமித்தம் பார்க்கும் வழக்கத்தை எடுத்து இயம்புகிறது.

நம்பிக்கைகள்

ஒவ்வொரு மனிதனும் ஆயிரக்கணக்கான நம்பிக்கைகளின் குவியலாகக் காணப்படுகின்றான். நன்மையைத் தேடும் மனிதன் பற்றுக்கோடாக நம்பிக்கை துணை நிற்கிறது. கடலிலே அகப்பட்டுத் தவிக்கும் ஒருவனுக்குக் கையில் கிடைத்த சிறிய மரக்கட்டையும் தெப்பமாகத் தெரியும். அதுபோல அலைகழிக்கப்படும் மனது, நம்பிக்கைகளைப் பற்றிக் கொள்ளும்பொழுது புத்துணர்ச்சி பெறுகிறது.

சங்ககாலத் தமிழரிடம் பலவிதமான நம்பிக்கைகள், காணப்படுகின்றன. அவற்றுள், கூடல் இழைத்தல், புலிப்பூசல், விரிச்சி கேட்டல், குறிகேட்டல், ஓந்தி நிமித்தம், பல்லி நிமித்தம், கண்ணும்

தோளும் துடித்தல், தும்மல், உன்னம் பார்த்தல், கடிப்பகை, ஏழு என்ற எண்ணைச் சிறப்பாகப் போற்றியமை ஆகியன நிமித்தங்கள் என்னும் இந்த இயலில் கூறப்பட்டுள்ளன.

குறிகேட்டல்

சங்ககாலத்தில் குறிகேட்கும் பழக்கம் வழக்கில் இருந்தது. அகவன் மகளிர், முதுபெண்டிர் முதலானவர்கள் குறி கூறினர், இவ்வாறு குறி கூறுபவர்களைக் கட்டுவிச்சியர் என்றும் குறிப்பிட்டனர்.

தன் மகளிடம் காணப்படும் வேறுபாடுகள் தலைவனால் வந்தது என்பதை அறியாத தாய், குறி கேட்கக் கட்டுவிச்சியை வரவழைப்பாள். எதிரே தலைவியை நிறுத்தி வைத்துத் தெய்வத்திற்குப் படையலிட்டுக் கட்டுவிச்சி வழிபடுவாள். பின்னர் முறத்தில் இட்ட பிடிநெல்லை நான்கு நான்காக எண்ணுவாள். இறுதியில், எஞ்சாமல் நெல் தீர்ந்து விட்டால் வேறு ஏதோ காரணத்தால் வந்த நோயாக இருக்கலாம் என்று கூறுவாள். 1, 2, 3 என்று நெல் எஞ்சினால் தலைவிக்கு வந்த நோய் முருகனால் வந்தது என்பாள். கட்டுவிச்சி குறிபார்த்த தன்மையினை,

நன்னுதல் பரந்த பசலைகண்டு அன்னை
செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீ,
கட்டின் கேட்கும்[46]

என்னும் வரிகள் எடுத்தியம்புகின்றன.

கண்ணும் தோளும் துடித்தல்

பெண்களின் இடக்கண்ணும், இடத்தோளும், ஆடவர்களின் வலக்கண்ணும், வலத்தோளும் துடித்தல் நன்மை பயக்கும் என நம்பினர். கண்ணகியின் இடக்கண் துடித்ததால் அவளது வாழ்வின் நன்மையும், மாதவியின் வலக்கண் துடித்ததால் அவளது வாழ்வில் தீமையும் நிகழ்ந்ததை,

கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உள்நிறை கரந்தகத்து ஒளித்து நீர் உகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன[47]

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

தும்மல்

தொடர் தொடராக வந்த தும்மல் தலைவன் திரும்பி வருவதற்கு அடையாளம் என்று கருதப்பட்ட நிலையினை,

குன்றகம் நண்ணி குறும்புஇறந்து சென்றவர்
உள்ளிய தன்மையர்போலும் அடுத்து அடுத்து
ஒள்ளிய தும்மல் வரும்[48]

என்பதன் வாயிலாக அறியலாம். தும்மினால் பிறர் நினைப்பதாகக் கருதுவதும் உண்டு என்பதனை,

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று[49]

என்ற குறள் உணர்த்துகிறது.

காக்கை கரைதல்

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற கருத்தில் அமைந்த பாடலொன்றைக் குறுந்தொகையில் காண்கின்றோம். அப்பாடலைப் பாடியவர் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்றே பெயர் பெறுகிறார்.

திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே[50]

'நும் வருகையைக் காக்கை கரைந்த நன்னிமித்ததாலே உணர்ந்து தலைவி ஆற்றியிருந்தனள். என்னுடைய அன்பு மொழிகளாலே அவள் ஆற்றியிருக்கவில்லை' என்று தோழி தலைவனுக்கு எடுத்துக் கூறினாள் என்பது பாட்டின் பொருள். இப்பாட்டின் மூலம் நன்னிமித்தமாகக் கரைந்த காக்கைக்குப் பலிச்சோறு படைக்கின்ற பழக்கம் பெண்களிடம் இருந்தது என அறிகிறோம்.

ஆந்தை அலறல்

போரில் புண்பட்ட வீரனொருவனை அவன் மனைவி வீட்டில் வைத்துக் காப்பாற்ற முயல்கின்றாள். அவன் இறந்து விடுவான் என்பதற்கு அறிகுறிகளாகப் பல தீயநிமித்தங்கள் தோன்றுகின்றன. அத்தீய நிமித்தங்களில் ஆந்தை அலறலும் ஒன்றாகக் காட்டப்படுகின்றது. .இதனை,

அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்[51]

என்பதால் அறியலாம்.

முடிவுரை

பழந்தமிழரது நம்பிக்கைகள் மிகப் பரந்துபட்டவை. அவற்றுள் ஒன்று 'சகுனம்' அல்லது 'நிமித்தம்' பார்த்தல். நிமித்தம் என்பது பின்னர் நிகழும் நன்மை தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறி என்பர். நிமித்தங்களை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து அவை அனைத்தும் உண்மை என நிறுவுதல் இயலாது. அவையெல்லாம் மூட நம்பிக்கைகள் என்று கருதினாலும், அவற்றுள் சில உலகியலை விட்டு முற்றும் விலகியதாகக் கொள்ளவும் இடமில்லை. நற்செயலையும், நற்பயனையும் காட்டும் குறியினை 'நன்னிமித்தம்' எனவும், தீச்செயலையும் தீமையையும் காட்டும் குறியினைத் 'தீ நிமித்தம்' எனவும் வழங்குவர். சங்க கால மக்கள் ஊழ்மீது நம்பிக்கை உடையவராக விளங்கினர். சங்ககால மக்கள் தவம் செய்வதிலும் நோன்பு இருப்பதிலும் நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.

அடிக்குறிப்பு

1. கதிரேசஞ் செட்டியார், மு. பண்டிதமணி., மண்ணியல் சிறுதேர் (மிருச்ச கடிகம்) பக். 270, அன்னை நிலையம், 1969.
2. தாயம்மாள், ப. அ., சங்க இலக்கியத்தில் மூடநம்பிக்கை, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இரண்டாவது கருத்தரங்குக் கட்டுரை, திருச்சி, சூன், 1970.
3. தொல்., புறத்., பா.30
4. தொல்., அகத்., பா.39
5. சீவக. பா.216
6. மலைபடு., பா.448,
7. சேந்தன் திவா. பக்.98
8. புறம்., பா.264
9. Subramania Pillai, G., Tree Worship and Ophiolatory, P. 78, Annamalai University, 1948.
10. தொல்., புறத்., பா.63
11. பதிற்று., பா.40
12. மேலது., பா.61
13. Subramania Pillai, G., Tree worship and ophiolatory. P. 80.
14. புறம்., பா.41
15. புறப்பொருள் வெண்பாமாலை, பா.243
16. மேலது., பா.243
17. Subramania Pillai, G., Tree worship and Ophiolatory P. 81.
18. புறம்., பா.130.
19. சீவக., பா.420, வரி 1849.
20. மலைபடு., பா.448
21. மேலது., பா.66.
22. புறம்., பா.204
23. குறுந்., பா.20
24. ஐங்., பா.391.

25. Thaninayagam S., Nature in Ancient Tamil Poetry P. 88, Tamil Literature Society, Tuticorin, 1953.
26. Sastri, K.A.N., Foreign Notices, P. 170.
27. Enthoven R.E., The Folk-Lore of Bombay P.251. Oxford University Press, 1924.
28. Chambers Encyclopaedia, Vol. XIII, P. 295. George Newnes Ltd, London, 1950.
29. அகம்., பா.9
30. அகம்., பா.151
31. மேலது., பா.351
32. Enthoven, R.E., The Folk-Lore of Bombay, P. 215
33. முல்லை., வரி.7-18
34. தொல்., பொருள்., பா.58
35. புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சி. பா.5
36. குறுந்., பா.218
37. புறம்., பா.280.
38. ஐங்., பா.466
39. மேலது., பா.466
40. சிலம்பு. பா.15, வரி.95-106.
41. புறம்., பா.41.
42. கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று, பக். 403.
43. புறப்பொருள் வெண்பாமாலை, பா.200
44. ஐங்., பா.374
45. மேலது., பா.218
46. நற்., பா.288, வரி.5 - 7
47. சிலம்பு., பா.5, வரி.237 - 239
48. ஐந்திணை எழுபது., பா.402, வரி. 4
49. குறள்., 1318
50. குறுந்., பா.210
51. புறம்., பா.280, வரி 5